IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.
DEPOSITION OF WITNESS
(As per XXIII case of Criminal procedure)
SESSIONS CASE NO.70/2020

Deposition of witness for prosecution : PW 3
Defense :

Name : பிரசாந்த்

Father's Name : பன்னீர்செல்வம்

Village :

Taluk : ஆரணிடவுன்

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.09.2022

முதல் விசாரணை

நான் ஓட்டுனர் வேலை செய்து வருகிறேன். சம்பவத்தில் காயம் அடைந்த மணிகண்டன் என் தம்பி ஆவார். மணிகண்டனை யார் தாக்கினார்கள்என்று எனக்குத் தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

அரசுதரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு அதனை தொடர்ந்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.

போலிசார் விசாரணையில், என் தம்பி மணிகண்டனுக்கும், ஹேமநாதன் மற்றும் லோகேஷ் மற்றும் அவரது நண்பர்கள் சிலருக்கும் முன் விரோதம் இருந்து வந்தது என்றும் அதன் தொடர்சியாக என் தம்பிக்கும் அவர்களுக்கும் பிரச்சினை ஏற்பட்டுவ ந்தது என்றும் 10.06.2017 அன்று மாலை 4.00 மணிக்கு என் தம்பி ராட்டினமங்கலம் கிராமரத்தில் திருவிழா பார்த்துவிட்டு வரும்போது லோகேஷ் மற்றும் ஹேமநாதன் இருவரும் சேர்ந்து என் தம்பியிடம் வீண் தகராறு செய்தார்கள்ள ன்றும் 11.06.2017 அன்று என் தம்பி சி.எஸ்.ஐ.சர்ச் அருகில் கங்கையம்மன் கோவில் நுழைவு வாயிலில் எனதம்பி நின்றுக்கொண்டிருந்தபோது என்றும் அப்போது பள்ளிக்கூடத் தெருவை சேர்ந்த ஹேமநாதன், லோகேஷ், பாணிப்பூரி கடை வைத்திருக்கும் கோபி டீக்கடை வைத்திருக்கும் ரவி மகன் சுந்தர் மணி தம்பிகுமார் ஆகியோர்கள் மணிகண்டனை ஹேமநாதன் கையில் வைத்திருந்த சிறிய பேனா கத்தியால் மணிகண்டனின் இடது கை மணிக்கட்டு இடது பின் பக்க விலா, வலது கை புஜம்

ஆகிய இடங்களில் இதோடு செத்து ஒழிந்து போடா என்று திட்டி பேனா கத்தியால் தாக்கினார் என்றும், மற்றவர்கள் கையால் அடித்தார்கள், காலால் உதைத்தார்கள் என்றும் அதை செந்தில் மற்றும் துளசி ஆகியோர் அதை பார்த்துவிட்டு காயம் அடைந்த என் தம்பியை ஆரணி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும் நான் சம்பவம் பற்றி கேள்விப்பட்டேன் என்று சொல்லி விட்டுதற்போது ஆஜர் எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.